


எழுத்துக்களம்
வெளியீட்டகம்

# சிந்தனைக் கோலங்கள்!

கவிஞர் **கவிவளவன்**





# சிந்தனைக்
# கோலங்கள்!

கவிஞர் **கவிவளவன்**

## எழுத்துக்களம்

வெளியீட்டகம்,

**செம்பாக்கம், சென்னை - 73**

# இன்பத்தை நாடு!

கவிபடும் பொருளும் கற்பனத் திறனும்;
புவிதரும் அழகும்புலன் செயும் நிறையும்;
கவியென ஏகும் காற்றினில் கரையும்!

விதியெனச் சாடும் வியன்மறைக் கோளும்;
கதியெனக் கூறும் கடல்படு நிலமும்;
சதியெனச் சாகும் சதுர்மறைப் பொருளும்;

நனியெனச் சொல்லல் நல்லவர்க் கழகோ!
கனியெனத் தேயும் கற்பனை மனமே!
இனியதைத் தேடி இன்பத்தை நாடிடு!

மதியினில் பெரியவன்; மறைகளின் கொற்றவன்,
கதியில் நிலையும் காற்றின் சுகமும்;
விதியினக் களைந்துவியன் நிலை தருவான்!


--11-07-1990

# இனியதாம் வாழ்வே!



தேனினும் இனியதாம் தீஞ்சுவை;
பூவினும்இனியதாம் சுகந்தம்;
சுவையினும் இனியதாம் சொற்கள்;
சொற்களில் இனியதாம் மழலை;

மழலையில் இனியதாம் நடையே!
நடையதில் இனியதாம் பாக்கள்!
பாவினும் இனியதாம் ஆடல்!
ஆடலில் இனியதாம் அசைவு;



தேடலில் இனியதாம் அறிவு!
அறிவினில் இனியதாம் அன்பு!
அன்பில் இனியதாம் உறவுகள்;
உறவுகளில் இனியதாம் நட்பு!

நட்பில் இனியதாம் நல்லறம்!
நல்லறம் இனியதாம் நன்மக்கள்!
மக்களில் இனியதாம் நற்செயல்!
செயல்களில் இனியாதாம் அன்பு!

அன்பில் இனியதாம் தோழமை!
தோழமையில்இனியதாம் இல்வாழ்வு!
வாழ்வில் இனியதாம் நற்பண்பு!
பண்பில் இனியதாம் நேயமே!
(05-10-2018 - 7.45 AM)




# இயற்கை வளம்

இயற்கை யென்பது இயன்நிலை யாகுமோ?
இறைவன் வகுத்த வாழ்வியல் தொடரோ?
இன்னலும் இன்பமும் இருவழிப் பயணம்!
மண்ணும் காற்றும் மானுடர் கென்றே,

எண்ணிய நிலையே இயற்கையை அழித்து!
கண்ணும் கருத்தும் கவனம் திருப்ப,
இன்னிய இயற்கையின் இயன்நிலை பிழைத்தது!
மன்னிய வாழ்வியல் மருவுடன் கலைந்தது!

புண்ணியம் என்பது, புதுவழி யல்ல!
மண்ணகம் காத்துப் பயனுற வேண்டும்!
பொன்னகம் என்றே இயற்கையைக் காத்து,
பொன்னிகர் வாழ்வில் பெருமைகள் அடைவோம்!

09-10-2019 (23.10)



# தேடலைச் சுமக்காதீர்!


தேவையில்லாமல் தேடலைச் சுமக்கும் மானுடங்கள்;
காவியமாகும் வாழ்வின் கரங்களைத் தீய்க்கும்!
ஓவியமாகும் இயற்கையின் அழகில் இன்பம் தோயும்!
காவிய நாயகன் இறைவன் உண்டோ – அவன்

கட்டியம் கூறிய முறைமையில் இயங்குமோ உலகம்?
பூட்டிய அறையின் புதையல் போலும் மண்ணின் வாழ்வு!
நாட்டிய அரங்கில் நாளுமோர் நடனம் செய்வோம்!
ஆட்டுவித்தவன் ஆடுவானாயின் அவனைத் தேடுவோம்!

பொத்திய செல்வமும் பூட்டிய அணிகளும் துணைவருமோ!
பாத்தியமில்லா பங்குகள் சேர்க்க இறைவனா சொன்னான்!
அத்துனையும் அளித்தேன்; அவனியும் நானே என்றான்!
இத்தரை வாழ்வில் என்னையும் அறிய இடர் களைவேன்!

சத்தியம் தன்னில் என்னைக் காண்பீர்; துயரம் நீங்கும்!
முத்திரைப் போலே முகிழ்ந்திடும் அறிவில் நானே!
தத்துவம் நிறைந்த சொல்லும் செயலும் நானே!
வித்தை அறிவீர்! வியனுலகில் இன்பம் காண்பீர்!
04-08-2019 (7.45PM)





# இறைதேடு!

விண்மீன்கள் தான்தரை யிறங்கி
வேதாந்தம் பேசிடுமோ!
கண்ணிமைதான் கண்ணீரின்
வலியதனை யறிந்திடுமோ!
பெண்மனத்தின் சீர்காதல்தான்
நற்பிள்ளைகளைத் தந்திடுமோ!

உண்ணாமல் உறங்காமல் உருவாக்கும்
பொருள் ஊரெல்லைக் காகுமோ!
மண்ணாளும் வேந்தர்தாம் மருவின்றிப்
பெருமை தனையடைவாரோ!
புண்ணான ஒருமனத்தில் பொழுதெலாம்
அழகாய்த்தான் தெரிந்திடுமோ!

கண்ணான இறயவனோ எந்நாளும்
காத்திடத் தான் விழைவானோ!
கண்தாவும் கற்பனையும் கவிபாடும்
பொற்பதமும் எந்நாளும் செழித்திடுமோ!
கண்ணே கனியமுதே, நெஞ்சத்தில்
இறைதேடு நாடும்பெருநிதியே!

கவிவளவன் **08-10-2019** (10-45)

# உண்மையின் விளிம்பில்.....!

மனமதை நிரப்பும் கனவுகளே;
மானுட வாழ்வின் பெரும் பயனோ!
உறவுக்குள் ஆயிரம் பிரிவுகளாய்,
உன்னத நிலையை சிதைத்திடுமோ?

உண்மையின் விளிம்பில் நல்மனமே,
ஊமையாய்ச் சிரிக்கப் பழகிடுமோ!
அன்பின் வழியே நல்லுறவு,?
ஆனந்த வாழ்வை வழிநடத்தும்!

இன்பமும் துண்பமும் இயல்பென்றால்,
இன்னிய வாழ்வின் பயன் யாதோ?
உறவுக்குள் உரிமையைத் தேடாதே!
உலகம் உனக்காய் நிலைப்பதில்லை!

மண்ணக வாழ்வே மாயமெனில்,
மானுட வாழ்வும் அவ்வழியே!
அன்பை அதிகம் தூவாதே!
அல்லல் பட்டுச் சிதையாதே!



கனவைப் போலே உறவுகளைக்
கரங்கோத்தே நீயும் மகிழ்ந்திடுவாய்!
அன்பில் அதனைத் தோயாதே!
அதனையே யெண்ணிக் கலங்காதே!

**13-12-2018**

# மகளிர் தின வாழ்த்துக்கள்! (08-03-2019)

மாதொரு பாகம் என்போம்;
மடிதந்த அன்னை யென்போம்!
தீதறு தாய்மை என்றே,
தீஞ்சுவைத் தமிழால் போற்றி,
மாதவள் மனத்தைச் சூடும்,
மருவிலாச் சிந்தை யுண்டோ?

“கோதை”யாய்த் தமிழைச் செய்தாள்!
கொள்கையால் “நாமடந்தை”;
ஏதுமோர் நன்மை செய்தே;
இயன்நிலை தந்தோம் இல்லை!

வாதமாய் பலவும் செய்வோம்;
வரன்முறைக் கடிவாளம் அவளே1
ஆதலால் காதல் செய்ய,
அவனுமே அழைதான் அன்று!

பேதமில் அன்பைச் சுமந்து,
போற்றுவோம் பெண்மை தனையே!
அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்கள்!

—0—


Statue of Kannagi, Chennai



# ஓம் கணபதியே நமஹ!



ஆதிநாள் வாழ்ந்த தமிழன்,
ஆன்றநல் அறிவின் பயனாய்;
மேதினியில் பூசெய் தொடங்க,
மேண்மையுடன் கண்ட பிள்ளை;

மோதஹம் கண்டானில்லை!
ஆதது வெள்வி என்பர் தமிழர்,
அதனில் தொடக்கம் ஆக,
மாதவர் பூசும் மஞ்சள் தரும்,

மகிமையில் நின்று ஆள்வான்!
தீதன்று மண்ணில் நிறைவான்,
தெய்வ வடிவம் கொள்வான்!
யாவிலும் தொடக்கம் அவனே,

சாணியிலும் எழுவான் அவனே!
காவியம் பாடும் பாவலர்க்கு,
கனிந்தநல் ஓலைப் பதத்தை,
மேவிடும் சுழியும் கோடாய்,

மேண்மையாச் சொல்வர் அதனைப்
பிள்ளையார்ச் சுழிதான் என்றே!
ஆதியாய் நின்ற அன்னான்,
அடுத்து நிறைந்த ஆட்சிச் சூழல்,

தும்பிக்கை நாயகனைத் சேர்க்க,
அவனுமே ஆனான் நமக்கும்,
ஆன்றநல் பிள்ளையார் ஆக!
வாதாபி பிறந்த அவனோ,

மாதவன் மருகனானான்,மருவிலா
கந்தன் தமையன்! உமையவள்
பிள்ளை என, ஊரார் மெச்ச நின்று,
ஆன்றநல் ஈசன் மகனுமானான்!

தமிழர்தம் அறிவுதன்னைத்
தடமின்றிச் சிதைத்துப் போட்டார்!
பரப்புரை கதைகள் நிறைய,
பாவமாய்த் தமிழர் அறிவே!

ஆயினும் துன்பம் இல்லை,
அனைவர்க்கும் பிள்ளையார்ச்
சதுர்த்தி நாளில் பிரியமாய்
வாழ்த்துச் சொன்னேன்!

**02-09-2019**




# மீள் பதிவுகள்

நேமமுறச் செய்வதுபோல்,
நிதமும் சிலப் பதிவுகளைத்
தாமாக அனுப்பி வைப்பர்;
தானுமே அதைப் படிக்காமல்!

நாமுமே படிப்போமென்று,
நலிந்தார் சிலர் படிப்பர்!
சேமமாய்ச் சில நிற்கும்,
சிந்தையைத் தூண்டிவிடும்!

வேதனையை நீக்கி விடும்,
விவேகச் சொற்களுண்டு!
வாதையைத் தான் தருமே,
வந்தவையே மீண்டும் வந்து!



வேதமோ தத்துவமோ அவை
விரும்பிக் கொள்வதற்கு?
தீதறு வணிக உத்தியென்று,
தெளிவுடனே அறிந்தோமோ!

நல்லவையை நாம் பகிர,
நலமுடனே செய்தி சொல்ல,
தொல்லையில் ஓர் கலனாம்,
தொடர்ந்து பயன் கொள்வீர்!

அல்லவை நீக்கி வைத்தால்,
அழகாய்த் தானி ருக்கும்!
எல்லையில் பயன் பாட்டில்,
யாவரும் சீர்மை கொள்வோம்!

**22-04-2019**

# விகாரி (எழில் மாறல்)

ஆண்டது பிறப்பதோர் அதிசயமன்று;
ஆன்ற தமிழரின் அறிவைச் செப்பும்,
வரையறைக் கொண்ட காலக் கணிதம்!
பகலன் பார்வைப் பதிவைக் கொண்டு,

சுழற்சியின் கணக்கில் கணிதம் செய்து,
ஆண்டையும் நமக்கு அளித்து வைத்தான்!
திசை தொடும் காலம் வடக்கும்தெற்குமாய்,
வடமொழிப் பெயரில் தமிழைச் சாய்த்தது!

காலம் விழுமிய கணக்குகள் யாவும்;
கணித்தே வைத்து வாழ்வியல் கண்டோன்!
இயற்கை எய்தும் மறுமுறைச் சுழற்சி,
இனியதாய் ஆண்டுள் கணிதம் ஆனது!

பூமியின் மீதுநேர்ப் பார்வை பொழிய,
சித்திரை என்பதாய்ச் சிந்தை சொன்னது!
ஆண்ட தமிழரின் அறிவைக் காப்போம்!
அவனியில் நமது பெருமை வளர்ப்போம்!

*விகாரி* என்றே விளம்பி வந்ததை,
*எழில்மாறல்* என்றே எழுதிவைத்தார்!
தமிழே என்பதால் மகிழ்ச்சி கொள்வோம்!
தகைவுடன் சொல்வேன் வாழ்த்து தனையே!
**(14-04-2019)**



இந்நூலாசிரியர் இன்றையத் திருவாரூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். நடுவண் அரசில்; சென்னையில், இடைநிலை அதிகாரியாகப் பணிபுரிந்து பணிநிறைவுக் கண்டுள்ளார். அடிப்படையில், கணித மாணவர், முதுநிலைப் பயின்றவர். மேலும், கணினி பயன் பாட்டியல், வணிக மேலாண்மை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில், முதுநிலைப் பட்டத்தோடு, இளநிலை சட்டவியலும் பயின்று தேர்ச்சிப் பெற்றுள்ளார். இவர், கல்வியில் கரையில என்பதாக விளங்குகிறார். எழுத்தும் எனக்கொரு பிள்ளைதான் என்பார் இவர். இவருக்குச், ஜோதிடக் கலையிலும், ஈடுபாடு உண்டு. இதுவும் இவருக்கு ஒரு வல்லமையாக விளங்குகிறது, எழுத்தாற்ற லோடு, பேச்சாற்றலும் கொண்டவர். கவிதையோடு,கதை, கட்டுரை நாடகம் ஆகியவற்றிலும் இவருடைய படைப்புகள் உண்டு.

இவருடைய இசைப்பாடல் தொகுப்பு ஒன்று, “கனவின் ஓசைகள்” எனும் பெயரில் ஒலித்தட்டாக, வெளி வந்துள்ளது. இவர், எளிமையான தோற்றமும், அனைவரிடத்தும், இயல்பாகவும், அன்புடனும் நட்புடனும் பழகும் குணமுடையவர் .

**யாதவக் கண்ணன் போலே,**
**யான்கண்ட தெய்வம் இல்லை!**
**மாதவன் போல்வான் ஈசன்,**
**மரியவள் குழந்தை ஏசு;**
**சோதரர்ச் சொல்லும் அல்லா;**
**சொல்லத்தான் வேறு அன்றி,**
**யாதுமே ஒன்றாம் அந்த,**
**ஈசனின் வடிவம் தானே!**

**- கவிவளவன் (1990)**

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்
22, ஆர்.பி. அவிண்யூ முதல் தெரு,
**செம்பாக்கம், சென்னை -73**
அலைபேசி: 9940061280
www.ezhuththukkalam.co.in